மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் க. கிருஷ்ணசாமி, அவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. க. பாலகிருஷ்ணன், பேசுங்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை தாலுகாவிற்கு உட்பட்ட ஒரு மாற்றுத் திறனாளி...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்கள் கட்சி உறுப்பினர் இன்றைக்கு பேசப் போகிறார். (குறுக்கீடு) அவரைப் பேசச் சொல்லுங்கள். ஏற்கெனவே நாம் அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்திருக்கிறோம், ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது zero hour அனுமதிப்பதில்லை என்று. (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினரைப் பேசச் சொல்லுங்கள், பதில் கிடைக்கும். உட்காருங்கள். (குறுக்கீடு)*

அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள். . .

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, பேரவைத் தலைவர் முன்பாக நின்று கொண்டு ஏதோ பேச முற்பட்டார். பின்னர் தரையில் அமர்ந்துகொண்டார்.)

இதுமாதிரி செய்வது சரியல்ல. இது முறையல்ல. இதெல்லாம் சரியில்லை. மீண்டும் மீண்டும் இந்த அவை அலுவலுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற வகையிலே டாக்டர் கிருஷ்ணசாமி நடந்துகொள்வதால் அவரை அவையிலிருந்து வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். அவைக் காவலர்கள் அவரை அவையிலிருந்து வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். இது முறையல்ல.

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.)

3. அறிவிப்பு

பேரவை மாட அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ள செய்தியாளர்களுக்கு பேனா மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மாட அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ள செய்தியாளர்கள் பேனா மற்றும் குறிப்பேடுகளை சட்டமுன்வடிவு பிரிவு 2-லிருந்து பெற்றுக்கொள்ளலாம்.*